# இந்தி கட்டாயபாடத்தால் தாய்மொழிப் பண்டிதர்கள் குறை நீங்குமா?

## இந்திப் பண்டிதர்களுக்குத் தானே வேட்டை!

### தாய்மொழிப் பண்டிதர் உயர்ந்தாலல்லவோ தாய்மொழி வளரும்!

### நாட்டு விடுதலைக்குப் பாடுபவர்களின் கடமை என்ன?

(கருவூர் கண்ணனார் எழுதுவது)

நமது நாட்டுக்குச் சிறிதும் பயன்படாத இந்தியை — நமது நாட்டு மக்கள் எள்ளவும் வேண்டாத இந்தியை இன்றைய காங்கரஸ் மந்திரியான ஆச்சாரியார் கத்தி முனையால் கட்டாயமாக்கி விட்டார். இதனால் இந்தி படித்து விட்டு வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் தமது இனத்தவருக்கு வேலை தேடிக் கொடுக்கத் தலைப்பட்டாரேயொழிய, தமிழிற்கோ அன்றித் தமிழ்ப் புலவர்களுக்கோ நன்மை செய்தாரென்று எந்த அறிவாளியும் கூற முடியாது. இன்றைய நிலையில் யூனிவர்சிடிகளிலும், தமிழ்ச் சங்கங்களிலும் தேர்வுபெற்று வேலையில்லாமல் தவிக்கும் தமிழ் வித்வான்கள் எத்தனை பேர் பேர் நம் நாட்டில் ஆதரிப்பாற்று இருந்து வருகின்றனர். இனியும் ஆண்டுதோறும் வித்துவான் பட்டதாரிகளை யூனிவர்சிட்டிகளும் சங்கங்களும் தேர்ந்தனுப்பிக் கொண்டுதான் இருக்கப்போகின்றன. எனவே தற்போது வேலையில்லாமல் இருக்கும் நூற்றுக் கணக்கான வித்துவான்களுக்கும், இனி வரப்போகும் வித்துவான் பட்டதாரிகட்கும், நமது நாட்டு நலம் விரும்பும் தாய்மொழியை வளர்க்கிறோமென்னும் காங்கரஸ் மந்திரிகள் என்ன செய்யப்போகின்றனர்? இந்தியால் தமிழ் கெடாதென்றும் அதனால் தமிழ் பன்மடங்கு வளரும் என்றும் கூறும் இவர்கள் தாய்மொழிப் பண்டிதர்களுக்கு ஆதரவு தராமல் எப்படித் தமிழை வளர்ப்பார்கள்? அது எப்படி வளரும்?

பழையபடி பி. ஏ., எல். டி.களையே கொண்டு எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே சொல்லிக் கொடுப்பதனால் நமது நல்ல தமிழ், இலக்கிய இலக்கணச் செம்மை பொருந்திய தமிழ், வளர்ந்து விடுமா? மாணவர் தமது தாய்மொழியில் பிழையற எழுதவும் பேசவும் கூடிய அறிவைப் பெற முடியுமா? இந்தி படித்தால் துளசிதாஸ் ராமாயணம் படிக்க உபயோகப்படும் என்று கூறுகிற ஆச்சாரியார் தமிழிலுள்ள கம்பராமாயணத்தைப் படித்துச் சுவைக்கும் சக்தியை நமது நாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்த முயலாததேன்? ஆகவே இந்தி கட்டாய பாடத்தால் இந்திப் பண்டிதர்கள் தான் வேலை பெறுவார்களேயொழிய, அதனால் தமிழ்ப் பண்டிதர்களின் குறை தீர்ந்து விடாது. இன்று உண்மையாகத் தமிழை வளர்க்கும் நோக்கம் காங்கரஸ் மந்திரிகளுக்கு இருக்குமாயின் ஹையர் எலிமெண்டரி, செகண்டரி உயர்தரப் பாடசாலைகளில் 5, 6வது வகுப்பிலிருந்தே நல்ல முறையில் எழுதப்பட்ட தமிழ் நூல்களை வைத்து தமிழ்ப் புலவர்களைக் கொண்டு திருந்திய முறையில் தமிழைக் கட்டாயமாகப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுது தான் உண்மையான தாய்மொழிக் கல்வியை நமது நாட்டில் காண முடியும்? இதைக் காங்கரஸ் மந்திரிகள் செய்வார்களா?